திருவண்ணாமலை "TANFED" மில்

166—(*வினா எண் 4282) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் உள்ள "TANFED"க்கு சொந்தமான மில்லை "TANCOF" வாங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், "TANCOF" – விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், எப்பொழுது ஒப்படைக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 12-9-1985 அன்று தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய வித்துக்கள் உற்பத்தியாளர் இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருவையாறு, பூதலூர், ஒரத்தநாடு பகுதிகளில் பழுதுபட்ட குழாய்கள்.

167—(*வினா எண் 9147) திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு, பூதலூர், ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் குடிநீர் தருவதற்காக போடப்பட்டுள்ள பைப்புகள், டேப்புகள் பழுதுபட்டு செயல்படாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சரிசெய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் 3 இறைப்பான்களும், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 5 இறைப்பான்களும், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியத்தில் 3 இறைப்பான்களும் பழுதுபட்ட நிலையில் உள்ளன. இறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஊராட்சி மன்றங்களிலே குடிநீர் வழங்குகின்ற நிலையில், பல்வேறு இடங்களில் பைப்புகள் பழுதடைந்துள்ளன. இன்றைய நிலையில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS